**<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.</u>**

**<u>அ.வ.எண். 118/2018</u>**

2026–ம் வருடம் மார்ச் திங்கள் 23–ம் நாளன்று 31வது பிரதிவாதி தரப்பு சாட்சியாக பி.வா.சா.78–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | : **S.R.உதயகுமார்** | **தொழில்** | : |
| **த/பெ.** | : | **வட்டம்** | : |
| **முகவரி** | : | **மதம்** | : |
| **ஜாதி** | : | **வயது** | : |

**<u>I.A.No.125/2026 என்ற மனுவில் 23.03.2026 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு முதல் விசாரணை</u> :–**

நான் இவ்வழக்கில் 31வது பிரதிவாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். 31வது பிரதிவாதி உதயகுமார் பெயரில் உள்ள ஆதார் அட்டை நகல் பி.வா.சா.ஆ.382. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 16.10.2008 ஆம் தேதிய 31வது பிரதிவாதி உதயகுமார் பெயரிலான கிரைய ஆவணம் எண்.6294/2008 சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.383. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 23.03.2026 ஆம் தேதிய 31வது பிரதிவாதி உதயகுமார் பெயரிலான வில்லங்க சான்றிதழ் ஆன்லைன் பதிவிறக்கம் பி.வா.சா.ஆ.384. ஆக குறியீடு

செய்யப்படுகிறது. **(மேற்படி ஆவணம் முழுமையற்றதாகவும், ஜெராக்ஸ் நகலாக இருப்பதால் ஆட்சேபனை செய்யப்பட்டது.)** கடந்த 23.03.2026 ஆம் தேதிய 31வது பிரதிவாதி உதயகுமார் பெயரிலான கூட்டுப்பட்டா எண்.1336 ஆன்லைன் பதிவிறக்கம் பி.வா.சா.ஆ.385. ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதிகள் தாக்கல் செய்த வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**1 முதல் 4, 6 முதல் 15, 18, 19, 21 முதல் 40, 42 முதல் 46, 48 முதல் 50, 52 முதல் 58, 60, 62, 63, 64, 65, 67, 68, 69, 70 முதல் 76, 78 முதல் 85, 87 முதல் 100, 102, 104 முதல் 105, 106, 114, 115 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

இல்லை.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தற்போது ஈரோடு மாவட்டத்தில் குடியிருந்து வருகிறேன். எனது ஊரிலிருந்து இருந்து தும்பிவாடி கிராமம் சுமார் 72 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். தும்பிவாடியில் எனக்கும் என் குடும்பத்தாருக்கும் பூர்வீக சொத்துக்கள் எதுவும் இல்லை. பி.வா.சா.ஆ.383 மூலம் நீங்கள் வாங்கிய கிரையப்பத்திரத்தை பி.வா.சா.ஆ.8-ன் அடிப்படையில் எழுதிக்கொடுத்த ரவிச்சந்திரனுக்கே அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களில் உரிமையில்லை என்பதால் பி.வா.சா.ஆ.383-ன் கீழ் உங்களுக்கு கிரையம் எழுதிக்கொடுப்பதற்கு ரவிச்சந்திரனுக்கு சட்டப்படி உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. 106 நபர்கள் கிரையம் பெற்றுள்ள ஆவணங்களில் நீங்கள், உங்கள் குடும்பத்தினர் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. நீங்கள் வாங்கிய பி.வா.சா.ஆ.383 கிரையப்பத்திரம் செல்லாததால் அதன் அடிப்படையில் நீங்கள் வாங்கிய

பி.வா.சா.ஆ.385 கூட்டுப்பட்டாவும் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்திற்கு யார் சொல்லி சாட்சியம் அளிக்க வந்துள்ளீர்கள் என்றால் ஆசிரமத்தில் சொன்னதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.23 18:06:29 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.